நமது இல்லங்களில் வெற்றி

– டெரிக் பிரின்ஸ்

வெற்றி என்பது மேற்கத்திய நாகரிகத்தின் பழமொழி. சூழல் மற்றும் வளர்ப்பின் மூலம், நாம் செய்யும் எல்லாவற்றிலும் — நம்முடைய தொழிலில், விளையாட்டுகளில், அரசியலில், தனிப்பட்ட வாழ்க்கையில் நாம் வெற்றியை பெறுவதற்கு தொடர்ந்து சவால்களை எதிர்கொள்கிறோம். இது ஒரு மேலான உந்துதல். இருப்பினும், தேவனுடைய பார்வையில் வெற்றி என்பது பெரும்பாலும் நம்முடைய தரத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு தரத்தால் அளவிடப்படுகிறது. இதை, தேவன் எனக்கு கற்பித்தார். ஒரு முறை சக ஊழியர் ஒருவர், "கைப்பெட்டியுடன் வீட்டை விட்டு வெளியேறும் ஒரு மனிதன்" தான் நிபுணர் என்று விவரித்ததை கேட்டேன். அந்த தரத்தின்படி, நான் அதிகளவில் பயணம் செய்ததாலும் எப்போதும் கைப்பெட்டியுடன் இருப்பதாலும், நான் ஒரு நிபுணர்.

இருப்பினும், ஒரு நாள் இதை குறித்து நான் தியானிக்கையில், கர்த்தர் என்னுடன் பேசினது என்னவென்றால், "நீ உலகம் முழுவதும் பயணம் செய்யலாம், ஆயிரக்கணக்கான மக்களுக்கு பிரசங்கம் செய்து முடிவில் ஒரு கூட்ட மக்களை சேர்க்கலாம். ஆனால் என் பார்வையில் உன் குடும்பம் ஒழுங்காக இல்லாவிட்டால், நீ தோற்றுப்போனவன்". தேவனின் பார்வையில் நான் வெற்றி பெற வேண்டும் என்று விரும்பி இதை ஏற்றுகொண்டேன். இதன் விளைவாக, குடும்பம், வாழ்க்கை மற்றும் பெற்றோர் சார்ந்த பொறுப்புகள் பற்றிய ஒரு புதிய புரிதல் எனக்கு கிடைத்தது.

"தகப்பன்மார்களே, உங்களுக்கு எழுதுகிறேன்"

1 யோவான் 2:13இல் அப்போஸ்தலன் "பிதாக்களே,... உங்களுக்கு எழுதுகிறேன்" என்று கூறுகிறார். நானும் அப்படியே செய்கிறேன். தகப்பனாக இருக்கிற உங்கள் ஒவ்வொருவரிடமும் நான் பேசுகிறேன்: வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் நீங்கள் வெற்றி பெறலாம், ஆனால் ஒரு தந்தையாக இருக்க தவறினால், தேவனுடைய பார்வையில் நீங்கள் வாழ்க்கையில் தோல்வியடைந்தவர்.

எபேசியர் 6:4இல் பவுல், தகப்பன்மார்களின் முக்கியமான பொறுப்புகளை ஒரே வசனத்தில் சுருக்கமாக கூறுகிறார்.

> *"பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக".*

கொலோசெயர் 3:21 இல் பவுல், "பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்", என்ற முந்தைய எச்சரிப்பை மீண்டும் கூறுகிறார். நிச்சயமாகவே, தாய்மார்களும் பிள்ளைகளின் வளர்ப்பிலும் பராமரிப்பிலும் மிக நெருக்கமாக ஈடுபடுகிறார்கள். இருப்பினும், தகப்பன்மார்களுக்கு தான் முக்கிய பொறுப்பு உள்ளது.

ஒரு தகப்பனுக்கு தன் பிள்ளைகளுக்கு நேரே இரண்டு கடமைகள் உள்ளன: முதலாவது தொடர்பு கொள்ளுதல், இரண்டாவது கற்பித்தல். இந்த வரிசைமுறை முக்கியமானது. தகப்பனுக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான தொடர்பு கொள்ளும் தடங்கள் வெளிப்படையாக இல்லாவிட்டால், தகப்பன் தான் கற்பிக்கும் பணியில் விரக்தியடைவார். தகப்பன் போதனை செய்தால் மட்டும் போதாது. பிள்ளைகளும் அதை ஏற்றுகொள்ள விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

தொடர்பை தக்கவைக்க, ஒரு தகப்பன் தனது பிள்ளைகளின் இரண்டு எதிர்மறை மனப்பான்மைகளுக்கு எதிராக காத்து கொள்ள வேண்டும்: ஒரு புறம் எதிர்ப்பு, மறுபுறம் மனத்தளர்வு. எனவே, தகப்பன் ஒவ்வொரு பிள்ளைக்கும் போதுமான நேரமும் கவனமும் செலுத்த வேண்டும். அவர் ஒவ்வொரு பிள்ளையையும் தனிப்பட்ட நபராக வளர்க்க வேண்டும். ஒரு குடும்பத்தில் இரண்டு பிள்ளைகளும் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஒரு பிள்ளைக்கு நன்மை தரும் அதே ஒழுக்கம் மற்றொரு பிள்ளையை அழிக்கும். ஒரு பிள்ளையை திருத்தம் செய்யும் முறை மற்றொரு பிள்ளைக்கு அது எதிர்ப்பை தூண்டும்.

For More details:
A-40, Anna Nagar Main Road, Sivapragasam Salai,
Tennur, Trichy - 620 017. Ph: +91 98 43 05 54 14

வளர்ந்த பிள்ளைகளுக்கு வழக்கமாக நடத்தப்படும் ஆலோசனை கூட்டத்தில், நான் கண்டறிந்தது என்னவென்றால் அவர்களின் பல பிரச்சனைகளுக்கு காரணமான சூழ்நிலையை அறியும் போது — அதில் தகப்பனின் கோபம், நியாயமற்ற தன்மை அல்லது அலட்சியம் அவரது பிள்ளைகளை தூண்டியுள்ளது.

"வீடு என்பது மையம்"

இந்த பொறுப்புகளை தகப்பன்மார்கள் மீது சுமத்துவது புதிய ஏற்பாடு மட்டும் அல்ல. அதே நெறிமுறை முழு வேதாகமத்திலும் இருக்கிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும், தேவன் தம்முடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்க்கை அவர்களின் வீட்டை மையமாக கொண்டிருக்க வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளார். உபாகமம் 11:18–21 பெற்றோர்களாகிய நம்மிடம் இதை குறித்து நேரடியாக பேசுகிறது:

> *"ஆகையால் கர்த்தர் உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் உங்கள் நாட்களும், உங்கள் பிள்ளைகளின் நாட்களும், பூமியின்மேல் வானம் இருக்கும் நாட்களைப்போல அநேகமாயிருக்கும்படிக்கு, நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து... அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிற போதும், படுத்துக்கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக. அவைகளை உங்கள் வீட்டு நிலைகளிலும் உங்கள் வாசல்களிலும் எழுதுவீர்களாக".*

வீட்டில் நம்முடைய பிள்ளைகளுக்கு, அவருடைய வார்த்தைகளையும் வழிகளையும் போதிக்கும் பொறுப்பை பெற்றோர்களாகிய நம் மீது தேவன் வைத்திருக்கிறார். இந்த பொறுப்பை, சில சிறப்பு மத நிறுவனங்களாகிய வழிபாட்டு ஸ்தலத்திற்கோ, தேவாலயத்திற்கோ அல்லது ஞாயிறு பள்ளிக்கோ கொடுக்க முடியாது. போதகர்கள், பிரசங்கியார்கள் அல்லது ஞாயிறு பள்ளி ஆசிரியர்களாகிய சில சிறப்பு தொழில் வல்லுநர்களுக்கும் கொடுக்க முடியாது. வீட்டிலேயே பெற்றோர்களாகிய நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு அவருடைய வார்த்தைகளையும் வழிகளையும் கற்பிக்க வேண்டும். இது ஒரு குடும்ப "பலிபீடம்" அமைப்பது அல்லது குடும்ப வழிபாடுகளை நடத்துவது பற்றி மட்டும் அல்ல. பயனுள்ளதாக அமைய ஆவிக்குரிய அறிவுறுத்தலும் ஒழுங்குமுறையும் தொடர்சியாக இருக்க வேண்டும். "நீங்கள் படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும்" என்று தேவன் சொல்லுகிறார். இது நாம் விழித்திருக்கும் எல்லா நேரங்களையும் குறிக்கும். நமது வீட்டின் அன்றாட செயல்கள் எல்லாவற்றிலும் தேவனுடைய வார்த்தையின் போதனையை இணைப்பது நம்முடைய வேலையாகும்.

வீட்டன் கல்லூரியின் தலைவராக இருந்த மறைந்த டாக்டர். வி. ரேமண்ட் எட்மன் ஒரு முறை எழுதுகையில்: "என்னுடைய பிள்ளைகளை நான் வளர்த்த விதத்தை திரும்பி பார்க்கிறேன். அதை நான் மீண்டும் செய்ய வேண்டியிருந்தால், நான் அவர்களுடன் எளிய மதசார்பற்ற செயல்களில் அதிக நேரத்தை செலவிடுவேன்". வளர்ந்த பிள்ளைகள் தங்களுடன் ஒன்றாக இருக்கும் இயல்பான நேரங்களைதான் அதிகம் நினைவில் வைத்திருப்பார்கள் என்பதை அவர் கண்டறிந்தார். ஒரு பிள்ளையினுடைய உண்மையான தொடர்பை ஐந்து நிமிடங்களில் பெற முடியாது. பெரும்பாலும், நீங்கள் எதிர்பாராத நேரத்தில் மிக முக்கியமான விஷயங்கள் ஒரு பிள்ளையினிடத்தில் தற்செயலாக, இயல்பான வழியில் கூறப்படுகிறது. தற்செயலான தொடர்பு இல்லாவிட்டால், இந்த விஷயங்களை ஒருபோதும் சொல்ல முடியாது.

பூமியிலே பரலோகம்

உபாகமம் 11:18–21 உள்ள பகுதியை தியானிக்கும் போது, இறுதி வாக்கியத்தால் நான் கவரப்பட்டேன்: "பூமியின்மேல் வானம் இருக்கும் நாட்களைப்போல". "பூமியின்மேல் வானம்" என்பதைக் குறித்து பெரும்பாலும், மக்கள் நம்பத்தகாத வகையில் பேசுவதை நாம் கேட்டிருப்போம், ஆனால் இந்த வாக்கியம் வேதத்தில் இருந்து எடுக்கப்பட்டதை நான் உணரவில்லை. இவ்வாக்கியம் தேவ பிள்ளைகளின் வாழ்க்கைக்கு பொருந்தும் என்பதைக் கண்டு நான் இன்னும் ஆச்சரியப்படுகிறேன். இன்று எத்தனை கிறிஸ்தவ வீடுகளை பூமியிலே பரலோகம் என்று துல்லியமாக விவரிக்க முடியும்?

ஆயினுங்கூட இது உண்மையில் தேவனின் நோக்கம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் இவர்களுக்கு இடையில் இருக்கும் நித்திய அன்பின் உறவு காலப்போக்கில் உருவாகவும்; ஒவ்வொரு வீடும் பூமியில் உள்ள பரலோகத்தின் இயல்போடு வாழும் பிரதிநிதியாய் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

பெரும்பாலும், வீட்டு வாழ்க்கை மனித இனத்திலிருந்து துவங்கியது என்று நாம் நினைக்கிறோம், ஆனால் அது அப்படியல்ல. யோவான் 14:2இல் இயேசுவானவர் "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு" என்று கூறுகிறார். வேதத்தில் வீடு என்னும் சொல் ஒரு கட்டிடம் என்னும் அர்த்தத்தை விட ஆழமான அர்த்தத்தைக் கொண்டுள்ளது. இது ஒரு தந்தையின் தலைமைக்கு கீழுள்ள ஒரு முழு குடும்பத்தையும் சித்தரிக்க பயன்படுத்தப்படுகிறது. இது ஒரே கூரையின் கீழ் சிலர் மட்டும் ஒன்றாக வாழ்வதை குறிப்பதல்ல. தேவன் எப்போதும் அதை காட்டிலும் மேலான அர்த்தத்தை கொண்டுள்ளார், அது தேவ தலைமையின் இயல்பில் பிணைக்கப்பட்டுள்ள ஒன்றை குறிக்கிறது.

தந்தைத்துவம், தலைமைத்துவம், ஐக்கியம்

பரலோகத்தில் தெய்வத்துவத்தின் நபர்களுக்கு இடையிலான உறவு நெருக்கமானதும் மூன்று நித்திய அம்சங்களையும் கொண்டுள்ளதாகும். பூமியில் உள்ள நமது வீடுகளில் இந்த மூன்று அம்சங்களும் வெளிப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

முதலாவது தந்தைத்துவம்

பிதாவாகிய தேவன் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாக எப்போதும் இருக்கிறார். மேலும், இயேசு கிறிஸ்து எப்போதும் அவருடைய குமாரனாக இருக்கிறார். எபேசியர் 3:14–15 இல் பவுல், "இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு" என்று கூறுகிறார்.

இங்கு "குடும்பம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட சொல் பாட்ரியா ஆகும், இது பேட்டர் என்னும் சொல்லில் இருந்து நேரடியாக உருவானது, அதற்கு தந்தை என்னும் அர்த்தமாகும். "குடும்பம்" என்று தமிழ் வேதாகமத்தில் சொல்கிறது. ஆனால் இதை "தந்தை" என்று மொழிபெயர்ப்பதே கிரேக்க மொழியின் மிக உண்மையான மொழிபெயர்ப்பாகும். தேவன் கிறிஸ்துவின் தந்தை என்று மட்டும் இந்த பகுதி நமக்கு காட்டவில்லை, பூமியிலுள்ள அனைத்து தந்தைத்துவமும், பிதாவாகிய தேவன் வைத்திருக்கும் மாதிரியில் பெறப்பட்டு நிறுவப்பட்டுள்ளது என்பதை காண்பிக்கிறது. அனைத்து தந்தைத்துவமும் பிதாவாகிய தேவனுடைய இயல்பின் ஒரு வெளிப்பாடாகும்.

தேவத்துவ உறவின் இரண்டாவது நித்திய அம்சம் தலைமைத்துவம் ஆகும்

1 கொரிந்தியர் 11:3 இல் பவுல் "ஒவ்வொரு புருஷனுக்கும் (ஆண் என்று அர்த்தம்) கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும் ஸ்திரீக்குப் (மனைவிக்கு) புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்" என்று கூறுகிறார். பிரபஞ்சத்தின் வரிசையில் கிறிஸ்துவின் மீது பிதாவின் தலைமைத்துவம் நித்தியமானது என்பதை நாம் காண்கிறோம் — அது எப்போதும் அப்படித்தான் இருந்து வருகிறது.

தேவத்துவ உறவின் மூன்றாவது நித்திய அம்சம் ஐக்கியமாகும்

யோவான் 1:1இல் கிறிஸ்துவானவர் (வார்த்தையானவர்) "தேவன் (பிதா) உடன் (கிரேக்கத்தில் ப்ரோஸ்)" நித்தியகாலமாய் இருப்பவர் என விவரிக்கப்படுகிறதை நாம் பார்க்கிறோம். அந்த கிரேக்க வார்த்தையின் அர்த்தம் "நேராக" அல்லது "முகமுகமாய்" எனப்படும். யோவான் 1:18 கிறிஸ்துவானவர் "பிதாவின் மார்பில்" இருந்தார் என்று கூறுகிறது. பிதாவுக்கும், குமாரனுக்கும் இடையே இருக்கின்ற அன்பையும் பரஸ்பர மகிழ்ச்சியையும், பரிசுத்த ஆவியானவரால் தொடர்ந்து பராமரிக்கப்படுகிறதையும் இது அழகாக சித்தரிக்கிறது. உண்மையில், பரிசுத்த ஆவியானவர் "பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையே உள்ள அன்பின் உறவாக" இருக்கிறார் என்று ஒருவர் விவரித்துள்ளார்.

சுவிசேஷத்தினாலும், பரிசுத்த ஆவியின் மூலமாகவும் தேவன் இந்த தெய்வீக ஐக்கியத்தை பூமியிலே நம் வாழ்விலும், குறிப்பாக, நம்முடைய வீட்டிற்குள் வெளிப்படுத்த விரும்புகிறார். 1 யோவான் 1:3இல் பரலோகத்தின் நித்திய ஐக்கியத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான தேவனின் அழைப்பை அப்போஸ்தலன் நமக்கு முன்வைக்கிறார்:

> *'நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் (சுவிசேஷங்களில் உள்ள பதிவு) இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்: எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது.'*

அப்படியானால், பரலோகம் ஒரு வீட்டின் நித்திய மாதிரியை வழங்குகிறது. மேலும் இந்த மாதிரியில் உறவின் மூன்று முக்கிய அம்சங்களான தந்தைத்துவம், தலைமைத்துவம் மற்றும் ஐக்கியம் இருக்கிறதை நாம் காண்கிறோம். பூமியில் இருக்கிற நம்முடைய வீடு தேவனின் நோக்கத்தை நிறைவேற்றி வெற்றிபெற வேண்டுமானால், இந்த மூன்று உறவுகளையும் உற்பத்திசெய்ய வேண்டும்.

நம்முடைய சமுதாயத்தில் மனைவி என்பவள் "வீட்டை (குடும்பத்தை) கட்டுகிறவள்" என குறிப்பிடப்படுகிறாள். இருப்பினும், இது இரண்டாம் நிலை உணர்வில் மட்டுமே உண்மையாகும். தேவனின் நடைமுறையில், புருஷனே வீட்டை (குடும்பத்தை) கட்டுகிறதில் முதன்மையானவர் — ஏனென்றால் என்னவாக இருக்க வேண்டுமோ அதை அவர் உருவாக்குவார். குடும்பம் அமைவதில் தந்தையே திறவுகோல்

ISSUE #028

இன்னும் தேவையா?

- ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.
- தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்.

See over for address details...

பதிவு செய்க!

- தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்ளைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.
- ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- கடிதம் மூலமாக அனுப்பவும்.

ஆவார். ஒரு அன்பான பரலோகப் பிதாவின் வடிவமைப்பை நிறைவேற்றும் ஒரு வீட்டை நிலைநாட்ட பொறுப்பு மற்றும் அதிகாரம் ஆகிய இரண்டையும் தேவன் அவருடைய தோள்களில் வைத்திருக்கிறார். ஒரு ஆண் தனது சரியான நிலையை எடுக்கும்போது, பெண் “துணையாக” (ஆதியாகமம் 2:20) அவனுக்கு பக்கத்தில் தனது இடத்தை எடுத்துக்கொள்கிறாள்.

அதிகாரச் சங்கிலி

கணவன்/மனைவி உறவுக்கு, காலத்திற்கு அப்பாற்பட்ட முக்கியத்துவம் இருப்பதை நாம் காணலாம், அது பிதாவுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையிலான நித்திய உறவின் மாதிரியைக் கொண்டுள்ளது. 1 கொரிந்தியர் 11:3ஐ திரும்பி பார்க்கும்போது, அதிகாரச் சங்கிலி உறுதியாக தெய்வத்துவத்தில் துவங்கி வீட்டிற்குள் விரிவடைகிறதை நாம் காணலாம்.

தேவன் கிறிஸ்துவின் தலையாயிருக்கிறார், கிறிஸ்து ஆண்/புருஷனுக்கு தலையாயிருக்கிறார், புருஷன் பெண்/மனைவிக்கு தலையாயிருக்கிறான். இறுதியாக அனைத்து அதிகாரமும் பிதாவினிடத்திலிருந்து பெறப்படுகிறது, மேலும் சங்கிலியின் சரியான இடத்தில் இருப்பதைப் பொறுத்து அது திரும்ப அவரிடம் செல்லுகிறது. கிறிஸ்துவிற்கு அதிகாரம் உண்டு ஏனெனில் அவர் பிதாவிற்கு கீழ்படிகிறார்; புருஷனுக்கு அதிகாரம் உண்டு ஏனெனில் அவன் கிறிஸ்துவிற்கு கீழ்படிகிறான். மனைவிக்கு அதிகாரம் உண்டு ஏனெனில் அவள் புருஷனுக்கு கீழ்படிகிறாள்.

ஒருமுறை ஒரு புத்திசாலியான ரோம நூற்றுக்கு அதிபதி தன் வியாதிப்பட்ட வேலைக்காரனின் சுகத்திற்காக இயேசுவிடம் வந்தான். அவன் இயேசுவின் வாழ்க்கையையும் அவரது அற்புதங்களையும் கவனித்ததால், அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கூறியது “நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு” (லூக்கா 7:8). நம்மில் சிலர் செய்கிறதுப் போல, “எனக்கு அதிகாரம் உண்டு!” என அவன் சொல்லவில்லை. அவனுக்கு கீழ்பட்டிருக்கிற சேவகரின் மீதுள்ள அவனுடைய அதிகாரம், தான் கீழ்ப்பட்டிருக்கின்ற ஒரு அதிகாரத்தை பொறுத்தது என்பதை அவன் அறிந்திருந்தான். ஒரு ரோம அதிகாரியாக, அவன் பேரரசனுக்கு திரும்பிய அதிகார சங்கிலியில் ஒரு இணைப்பாக இருந்தான். எனவே, யாரேனும் ஒருவன் நூற்றுக்கு அதிபதியின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய மறுத்தால், அவன் பேரரசனின் அதிகாரத்தை நிராகரிக்கிறான்.

நூற்றுக்கு அதிபதி இயேசுவிடம் தன்னை அறிமுகப்படுத்தும்போது, “நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும்” என்று கூறினான். ஏன் “நானும்” என்ற வார்த்தையை அவன் பயன்படுத்தினான்? ஏனெனில் அவன் தன்னை இயேசுவோடு ஒப்பீடு செய்கிறான். தனது இராணுவ அதிகாரத்தில் இருக்கிற அதே கொள்கை இயேசுவின் ஆவிக்குரிய ஊழியத்திலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அவன் உணர்ந்தான். இயேசுவும், கூட “அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவராயிருந்தார்”. நூற்றுக்கு அதிபதியின் அதிகாரம் பேரரசருடனான உறவை சார்ந்ததுப் போல, இயேசுவின் அதிகாரமும் பிதாவுக்கு முழுமையாக கீழ்ப்படிந்திருப்பதை சார்ந்தது. ஒவ்வொரு மண்டலத்திலும் கொள்கை ஒன்றுதான்: அதிகாரத்தைப் பெற, நாம் அதிகாரத்துக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும்.

உங்கள் விபரம்

NAME: MR / MRS / MISS ....

ADDRESS: ....

....

CITY: .... POSTCODE: ....

EMAIL: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை: ₹

Derek Prince
MINISTRIES INDIA

Contact us

www.derekprince.com/en-in
admin@derekprince.in
Ph : 9585538201
A40, ANNA NAGAR
MAIN ROAD,
SIVAPRAGASAM SALAI,
Trichy - 620017